**கவனிக்க.-** *2006.04.28 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி ( IV அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1444 - 2006 මැයි 05 වැනි සිකුරාදා- 2006.05.05

*1444 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 398 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 398 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 399 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) இலங்கை மின்சார சபை (திருத்தம்) சட்டமூலம் 2006, ஏப்பிறல் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) மின்சாரச் சீர்திருத்தம் (திருத்தம்) சட்டமூலம் 2006 ஏப்பிறல் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, மே 11 ஆந் தேதி வியாழக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, ஏப்பிறல் 28 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கை புகையிரத சேவைகள்

இலங்கைப் புகையிரதப் பகுதியில் பீ. எஸ். 80 இறா. மற்றும் பீ. எஸ். 88 இறா. தண்டவாளங்களுக்கு தேவையான ஒவ்வொன்றும் 20,000 தண்டவாள நங்கூரங்களை வழங்குதல்

தலைவர், கேள்விச் சபை, இலங்கைப் புகையிரத சேவைகள், ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கையில் பின்வரும் பொருட்களை வழங்குவதற்கான கேள்விகள் உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

| பொருள் | அளவு | விபரம் | வரைவு இல. |
|---|---|---|---|
| 1 | 20000 | தண்டவாள நங்கூரங்கள் (பீ. எஸ். 80 இறா தண்டவாளம்) | 14952, 20969 |
| 1 | 20000 | தண்டவாள நங்கூரங்கள் (பீ. எஸ். 88 இறா தண்டவாளம்) | 14951, 20970 |

உற்பத்தியாளர்கள் தமது விலைமனுக்களை அதிகாரத் தத்துவம்பெற்ற அங்கீகரிக்கப்பட்ட முகவர்களினூடாக சமர்ப்பிக்கலாம்.

3. மீளப்பெறப்பட முடியாத கேள்விப் பணமாக ரூபா 2,500 ஐ மட்டும் அல்லது அதற்கு சமமான இலகுவாக மாற்றீடு செய்யக்கூடிய தொகையைச் செலுத்துவதன் மூலம் புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகம், ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை அல்லது வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களிலிருந்து 2006.06.23 பிற்பகல் 3.00 மணிவரை (இலங்கை நேரம்) பெறப்படும். கேள்விப்பத்திரங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. கேள்விகள் 2006.06.27 பிற்பகல் 2.00 மணிக்கு (இலங்கை நேரம்) மூடப்படும்.

4. உற்பத்தியாகும்/வழங்கப்படும் தண்டவாள நங்கூரங்கள் ஐ. எஸ். ஓ. 9001/ 2000 பீ. எஸ். ஈ. என். ஐ. எஸ். ஓ. 9001 : 2000 கம்பனி சான்றிதழுக்கு அமைவானதாக அல்லது அதற்குச் சமமான சர்வதேச தர முகாமைத்துவ முறைமை நியமத்துக்கு உரித்தானதாக இருத்தல் வேண்டும்.

5. இலங்கைப் புகையிரத தலைமையகம், இலங்கைப் புகையிரதப் பகுதி, ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கையில் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும். கேள்வி ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேள்விகள் திறக்கப்படும்போது சமுகமளிக்க அனுமதிக்கப்படுவர்.

6. முத்திரையிடப்பட்ட கேள்விகள் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகக் கையளிப்பதன் மூலமாகவோ பின்வரும் முகவரியிற் சமர்ப்பிக்கப்படலாம். தலைவர், திணைக்கள கேள்விச் சபை, இலங்கைப் புகையிரத சேவைகள், புகையிரத தலைமையகம், ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை

7. கேள்விப் பத்திர ஆவணங்களை எந்தவிதக் கட்டணமுமின்றி புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகம், ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கையிற் பரிசீலிப்பதுடன் மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து பின்வரும் முகவரியிற் தொடர்பு கொள்ளவும் :

புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர்,
இலங்கைப் புகையிரத சேவைகள்,
ஓல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

தொலைபேசி இலக்கங்கள் : 94 (11) 2432044/ 94 (11) 2436818.

தொடர்பு இல.: எஸ். ஆர். எஸ்./எவ் 6477

தலைவர்,
திணைக்கள கேள்விச் சபை,
இலங்கைப் புகையிரத சேவைகள்.

5-52

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அட்டோர்னி தத்துவப் பத்திரம் வலுநீக்கம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கொழும்பு 13, பாபர் வீதி, இலக்கம் 95 என்ற முகவரியைச் சேர்ந்த கீழே கையெழுத்திட்டுள்ள வைத்தி ஐயம்பிள்ளை பரமலிங்கம் ஆகிய நான் இக்குடியரசில் கொழும்பு 13, பாபர் வீதி, இலக்கம் 95 என்ற முகவரியைச் சேர்ந்த சுப்ரமணியம் லோகதேவி என்பவரை நியமிக்கும் முகமாக என்னால் நிறைவேற்றப்பட்ட 1988.11.03 அன்று கொழும்பு பிரசித்த நொத்தாரிஸ் சின்னையா கதிர்காமலிங்கம் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 3261 ஆம் இலக்கமுடைய அற்றோர்ணி தத்துவப்பத்திரத்தை இரத்து செய்வதாகவும் வலு நீக்கம் செய்வதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் இரத்து செய்வதாகவும் நான் பொது மக்களுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன்.

வைத்தி ஐயம்பிள்ளை பரமலிங்கம்.

5-39

**அட்டோர்னி தத்துவத்தை இரத்துச் செய்தல்**

ரத்மலானை காலி வீதி, இல. 372 இல் வசிக்கும் மக்கொனகே ஆனந்த சிரில் பராக்கிரம பெர்னாண்டோ ஆகிய என்னால் கையொப்பம் இடப்பட்ட பகிரங்க நொத்தாரிசு ஆர். எஸ். ஆரியப்பொல 2001, மே 10 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 256 எனும் அட்டோர்னி தத்துவத்தின் மூலம் மொறட்டுவ கொரலவல்ல இல. 4B இல் வசிக்கும் மக்கொனகே ஆனந்த சுனித் விக்கிரம பெர்னான்டோவிடம் வழங்கப்பட்ட அட்டோர்னி தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்வதாகவும் இதன் பிறகு அவரால் என் சார்பாக மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாளியாக மாட்டேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்கொனகே ஆனந்த சிறில் பராக்கிரம பெர்ணான்டோ.

5-48

# ஏல விற்பனைகள்

**மக்கள் வங்கி-குருநாகல் கிளை**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழான தீர்மானம்

**வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வேவுட வில்லி ஹத்பத்துவ, திரகந்தஹய கோரளை, வெஹெரையில் அமைந்துள்ள குருநாகல் மாவட்ட நீதிமன்றின் 4317/பி ஆம் இலக்க வழக்கின் தீர்ப்பில் கோவை செய்யபட்டுள்ள 1972.11.07 ஆந் திகதியுடைய 370 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வெஹெரபொல அல்லது உனபத்தாவ அல்லது உனபத்தாவ கும்புர என்ற தற்போது மேட்டுக்காணியின் 02ஏ ஆம் இலக்க அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழவகை கட்டிடம் உட்பட அனைத்தும் அடங்கலாக ஏல விற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 00ஏ. 00றூ. 25.35 பே.)**

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் 2006.05.23 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு குறிப்பிட்ட சொத்து அமைந்துள்ள இடத்தில் என்னால் பிரசித்த ஏல விற்பனை செய்யப்படும்.

2006.03.03ஆந் திகதிய இலங்கைஅரசின் வர்த்தமானியையும் 2006.02.15ஆந் திகதிய "டெய்லி நியுஸ்", 2006.02.16 ஆந் திகதிய "தினமின" 2006.02.15 ஆந் திகதிய "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்குச் செல்லும் பாதை.**- குருநாகல்-கொழும்பு பிரதான பாதையில் 1.5 கிலோமீட்டர் அளவு சென்றவுடன் அகப்படும் வெஹெரையால் இடது பக்கமிருக்கும் தென்னை அபிவிருத்திச் சபைப்பாதையில் 300 மீட்டர் அளவு சென்றவுடன் பாதைக்கு அருகில் இந்த ஆதனம் அமைந்துள்ளது.

**பணம் செலுத்தும் முறை.**- ஏலவிற்பனையின் முடிவின்போது சொத்தை விலைக்கு வாங்கிய நபர் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு கொடுப்பனவை பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) தாம் வாங்கிய விலையின் தொகையில் 10% த்தையும் ;

(2) உள்ளூராட்சி அதிகார சபையினதும், பிரதேச சபையின் 1% வரியையும் ;

(3) ஏலவிற்பனையாளரின் பங்காக ஏலவிற்பனைத் தொகையின் 2 1/2% தரகையும் ;

(4) எழுதுவினைஞர்களினதும் அறிவிப்பாளர்களினதும் கட்டணமாக ரூபா 500 ஐயும் ;

(5) விற்பனைச் செலவு மற்றும் ஏனைய செலவுகள் இருப்பின் அந்தப் பணத்தையும் ;

(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணத்தையும், விலைக்கு வாங்கிய பணத்தின் மிகுதி 90% பங்குப் பணத்தை ஏலவிற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் குருநாகல் மக்கள் வங்கி பிரதேச பிரதான முகாமையாளரிடம் செலுத்தப்படல் வேண்டும். தொலைபேசி இல. 037-2222453, பெக்ஸ் இல. 037-2222338.

உரிமைப்பத்திரம், மேலதிக விபரங்களைக் கீழ்க்குறிப்பிடப் பட்டுள்ள முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும். மேற்குறிப்பிட் டுள்ளபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறின் ஏற்கனவே செலுத்திய பணத்தின் 10% தையும் திருப்பிச் செலுத்தாமலிருக்கவும் மீண்டும் சொத்தை விற்பதற்கும் வங்கிக்கு உரிமையுண்டு.

டபிள்யு. எம். ஐ. கல்லேல்ல (சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், உத்தரவுபெற்ற ஏலதாரர்,
மதிப்பீட்டாளர்.

இல. 28, "புதிய சட்டத்தரணிகள் கட்டிடத் தொகுதி",
குமாரதுங்க மாவத்தை,
குருநாகல்.
தொலைபேசி இல. 037-2220062.

5-31

---

**மக்கள் வங்கி-குருநாகல் கிளை**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழான விற்பனை

**வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வேவுட வில்லி ஹத்பத்துவ, திரகந்தஹய கோரளை, "பெல்கொட எஸ்டேட் எனும் பென்மன்ட் குருப்" என்ற காணிக்கு 1997.09.05 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 2377 ஆம் இலக்க வரைபடத்தின் 02 ஆம் இலக்க காணி காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழவகை கட்டிடம் உட்பட அனைத்தும் அடங்கலாக ஏல விற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 3ஏ. 1றூ. 7.5 பே. (3ஏ. 01றூ. 7.5பே.))**

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் 2006.05.25 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு

குறிப்பிட்ட சொத்து அமைந்துள்ள இடத்தில் என்னால் பிரசித்த ஏல விற்பனை செய்யப்படும்.

2002.05.31 ஆந் திகதி இலஙகை அரசின் வர்த்தமானியையும் 2004.12.14 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", 2004.12.03 ஆந் திகதிய "தினமின" 2004.12.14 ஆந் திகதிய "தினகரன்" ஆகிய பத்திரிகை களையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்குச் செல்லும் பாதை.**- குருநாகல்-கொழும்பு பிரதான பாதையில் தம்பொக்கை வரைசென்று கட்டுபிடிய ஊடாக ரம்புக்கனை பாதையில் 3/1ஆம் இலக்க பாலத்தருகே கொஸ்கொல்ல சந்தியின் அரசமரத்தடியால் இடது பக்கமிருக்கும் மாவத்தகமைப்பாதையில் 03 கிலோ மீட்டர் அளவு சென்றவுடன் பொல்கொட எஸ்டேட் அருகால் வலது பக்கம் இருக்கும் கிரவல் பாதையால் சென்று பெரிய வளைவினருகால் நேரே சென்று பரிபாலிக்கப்படாமல் இருக்கும் பாதையால் செல்லும் போது இந்த ஆதனம் அமைந்துள்ளது.

**பணம் செலுத்தும் முறை.**- ஏலவிற்பனையின் முடிவின்போது சொத்தை விலைக்கு வாங்கிய நபர் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு கொடுப்பனவை பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) தாம் வாங்கிய விலையின் தொகையில் 10% த்தையும் ;

(2) உள்ளூராட்சி அதிகார சபையினதும், பிரதேச சபையின் 1% வரியையும் ;

(3) ஏலவிற்பனையாளரின் பங்காக ஏலவிற்பனைத் தொகையின் 2 1/2% தரகையும் ;

(4) எழுதுவினைஞர்களினதும் அறிவிப்பாளர்களினதும் கட்டணமாக ரூபா 500 ஐயும் ;

(5) விற்பனைச் செலவு மற்றும் ஏனைய செலவுகள் இருப்பின் அந்தப் பணத்தையும் ;

(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணத் தையும், விலைக்கு வாங்கிய பணத்தின் மிகுதி 90% பங்குப் பணத்தை ஏலவிற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் குருநாகல் மக்கள் வங்கி பிரதேச பிரதான முகாமையாள ரிடம் செலுத்தப்படல் வேண்டும். தொலைபேசி இல. 037-2222453, பெக்ஸ் இல. 037-2222338.

உரிமைப்பத்திரம், மேலதிக விபரங்களைக் கீழ்க்குறிப்பிடப் பட்டுள்ள முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும். மேற்குறிப்பிட் டுள்ளபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறின் ஏற்கனவே செலுத்திய பணத்தின் 10% தையும் திருப்பிச் செலுத்தாம லிருக்கவும் மீண்டும் சொத்தை விற்பதற்கும் வங்கிக்கு உரிமையுண்டு.

டபிள்யூ. எம். ஐ. கல்லேல்ல (சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், உத்தரவுபெற்ற ஏலதாரர்,
மதிப்பீட்டாளர்.

இல. 28, "புதிய சட்டத்தரணிகள் கட்டிடத் தொகுதி",
குமாரதுங்க மாவத்தை,
குருநாகல்.
தொலைபேசி இல. 037-2220062.

5-33

---

**மக்கள் வங்கி - கோர்பறேட் பேங்கிங் டிவிஷன் - வாடிக்கையாளர் தொடர்புகள் யுனிட் 01**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழான தீர்மானம்*

**ஓர் பெறுமதியான சொத்துக்கான ஏலவிற்பனை**

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குரு கோறளை ராகம பத்து தண்டுகமவில் அமைந்த தவட்டகஹவத்த என்ற ழைக்கப்படும் (அனுமதிபெற்ற அளவையாளர் D. P. விமலசேன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1992.12.29 ஆந் திகதி மற்றும் 307 இலக்கமும் கொண்ட வரைபடத்தில் லொட் 1மீள அளக்கப்பட்டது) காணி வரிமதிப்பீட்டு இலக்கம் 439 அனுமதிபெற்ற அளவையாளர் டி. பி. விமல சேன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2001.11.17 ஆந் திகதிய 4112 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் 1 என குறிப்பிடப்பட்ட பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு அங்குள்ள கட்டிடங்கள், பயிர்கள் மற்றும் யாவும் உட்பட**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 1றூ. 12.40 பே.)**

மக்கள் வங்கியினால் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் நாங்கள் மேற்கண்ட சொத்தை 2006, மே 27 ஆந் திகதி சனிக்கிழமை மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வோம்.

**தீர்மான அறிவித்தலுக்காக.**- தயவு செய்து 2005.06.03 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2005.05.21 ஆந் திகதிய "டெய்லிநியூஸ்", "தினமின", "தினகரன்" புதினப் பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் முறை.**- வெற்றிகரமான கொள்வனவாளர் ஏலத்தின் முடிவில் பின்வரும் கட்டணங்களை காசாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) ஒவ்வொரு விற்பனைக்கும் கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து வீதம்) ;

(2) உள்ளூராட்சி அதிகாரசபைக்குச் செலுத்தவேண்டிய உள்ளூர் அதிகாரசபை வரி 1% (ஒரு வீதம்) ;

(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 1/2% (இரண்டரை வீதம்) ;

(4) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூ. 500 ;

(5) விற்பனைச் செலவு மற்றும் வேறு ஏதாவது கட்டணங்கள் ஏதுமிருப்பின் ;

(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்முதல் விலையில் மீதி 90% கட்டணத்தை விற்பனை நாள் முதல் 30 நாட்களுக்குள் கொழும்பு 10, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை, இல. 35, ஏ. என். சி. எல். கட்டிடம், மக்கள் வங்கி யுனிட் 1, தலைமை முகாமையாளரிடம் (வாடிக்கையாளர் தொடர்பு) செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 4713460.

மேற்கூறப்பட்ட முகவரியில் காணி உறுதி மற்றும் விபரங்களையும் பெறலாம். குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள் கூறப்பட்ட கட்டணம்

செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட 10% தொகையினை பறிமுதல் செய்யும் சொத்தினை மீள் விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
இலங்கையிலுள்ள தனியார் மற்றும் அரசதுறை
வங்கிகளுக்கான பட்டய ஏலதாரர் மற்றும்
மதிப்பீட்டாளர் மற்றும் நீதிமன்ற ஆணையாளர்.

| | |
|---|---|
| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகம் : |
| 24, டொரிங்டன் வீதி, | 55ஏ, தர்மபால மாவத்தை, |
| கண்டி. | கொழும்பு 03. |
| தொலைபேசி இல. : 081-2227593 | தொலைபேசி இல.: 2441761, |
| தொலைநகல் இல. : 081-2224371 | தொலைநகல் இல.: 2448526, |
| | மின் அஞ்சல் : samera@sri.lanka.net |

5-58

---

### இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 22 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை விற்பனை*

முறி இல. 766-68 D/2 கம்பஹா றோட், யக்கல என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. ஜோதிமுனி குணரட்னவின் கடன்பொறுப்புகளுக்காக ஈடுவைத்த ஆதனம்

இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2002.10.11 ஆந் திகதி 12580 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2002.10.07 ஆந் திகதி "தினமின", "டெய்லிநியூஸ்", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 1/16, நீதிமன்ற றோட், கம்பஹா என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. ரி. எம். எஸ். பிரிஸ் 2006.05.28 ஆந் திகதி மு. ப. 9.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

#### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோறளை, மெதபற்றுவில் கம்பஹா அலுத்கமவில் அமைந்த பண்டாரவத்த என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஏ. ரூபசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 1986.03.15 திகதியிட்ட வரைபடம் இல. 118B/1986 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில்: பெருந்தெருவும்; கிழக்கில்: துண்டு 2 உம்; தெற்கில்: துண்டு 19 உம்; மேற்கில்: பெரகும் மாவத்தையும் எல்லைகளாகக் கொண்டு முப்பத்தைந்து தசம் ஐந்து சைபர் பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 35.50பே.) விஸ்தீரணமுடையதாகும். இது கம்பஹா காணிப்பதிவகத்தில் ஈ 284/146 இல் பதிவு செய்யப்பட்டது.

ஜே. எம். ஏ. ஆரியரட்ன,
சிரேஷ்ட முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மேற்தரக் கிளை,
கம்பஹா.

5-84

---

### வரையறுக்கப்பட்ட செலான் வங்கி - முதலாவது நகர அலுவலக கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்*

**இரண்டு பெறுமதிமிக்க காணித்துண்டுகள் (வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வேஉடவில்லி ஹத்பற்று கந்தஹே கோறளை, மாவத்தகம மற்றும் ரம்பட்டவில் அமைந்துள்ளதும் "ரம்பட்டே வத்தை" என அழைக்கப்படும் காணியினது) ஏலவிற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : ஒன்றிணைக்கப்பட்ட துண்டு 1 மற்றும் 2 - ஒரு ஏக்கர் மற்றும் துண்டு 17 - 36 பேர்ச்சஸ்கள்)**

**ஆதனத்திற்கு உட் பிரவேசிக்கும் வழி.-** விற்பனைக்குரிய ஆதனம் வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கந்தஹே கோறளை, வேஉடவில்லி ஹத்பற்று, மாவத்தகம பிரதேச சபையின் கட்டிடம் எழுப்பும் இடப்பரப்பு எல்லைகளுக்குள் மாவத்தகமையில் அமைந்துள்ளதும், குருநாகல் சந்தியிலிருந்து கண்டி விதி வழியே 'மாவத்தகம சுப்பர் மார்க்கெட்' கட்டிடம் வரை 13 கி. மீ. தூரம் சென்று இவ்வாதனத்தை அடையலாம். மோட்டார் வண்டி செல்லக்கூடிய வீதிகள் வலைப்பின்னலினால் அமைக்கப்பெற்று அநேகமாக 'மாவத்தகம சுப்பர் மார்க்கெட்' கட்டிடத்தின் பின்னால் கண்டி வீதியிலிருந்து ஏறக்குறைய 75 யாருக்கு அப்பால் இவ்வாதனம் அமைந்துள்ளது.

*(கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சீ. எஸ். ஓ. டீ. லிவேரா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 1989, திசெம்பர் 18 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 124 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ள கடப்பாடுடையவர்/ஈடு வைத்தவரான 1985 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க சட்டத்தினால் பாராளுமன்றத்தில் கூட்டிணைக்கப்பட்டுள்ள மாவத்தகம, கண்டி வீதி, இல. 132/80 ஐச் சேர்ந்த 'இலங்கை சாமோதய மன்றம்' இற்கு சொந்தமான ஆதனம்)*

வரையறுக்கப்பட்ட செலான் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் மேற் குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2006.05.23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் நான் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 1998.07.17 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 1998.07.10 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**விற்பனை அறிவித்தலுக்காக.**- 2006.05.05 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம் :**

(1) ஏல முடிவில் கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;

(2) கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 வேலை நாட்களுக்குள் செலுத்த வேண்டும் ;

(3) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;

(4) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2 (இரண்டரை வீதம்) ;

(5) ரூபா 36,706 ஐ விஞ்சாதவாறு மொத்த விளம்பரச் செலவுகளின் 50% (ஐம்பது வீதம்) ;

(6) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;

(7) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தற் கட்டணம் ரூபா 4,000

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் கொழும்பு 3, காலி வீதி, இல. 90, செலிங்கோ செலான் கோபுரங்கள், 12 ஆவது தளம், வரையறுக்கப்பட்ட செலான் வங்கி, பொது முகாமையாளர் (சட்ட சம்பந்தமான பகுதி) அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும்.
தொலைபே இல.: 2456263, 2456274.

டன்ஸ்டன் கெலார்ட்,
நீதிமன்ற ஆணையாளரும், தரகரும்,
நிபுணத்துவம் பெற்ற ஏலதாரர்,
விலைமதிப்பிடுநரும் ஆதன முகவரும்

381 1/1, காலி வீதி,
கொழும்பு 4.

தொலைபேசி இல. : 2591167.
தொலைபேசி/தொலைநகல் இல. : 2500838, 2584874
துரித அழைப்பு : 0722-250422

5-74

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 4.45 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், 32, லோட்ஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், 32, லோட்டஸ் வீதி, கொழும்பு 1** என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.-** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது** என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை - 2006**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மே** | .. | வெள்ளி | 05.05.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.04.2006 |
| | | வியாழன் | 11.05.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.04.2006 |
| | | வெள்ளி | 19.05.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.05.2006 |
| | | வெள்ளி | 26.05.2006 | .. | நண்பகல் 12 | வியாழன் | 11.05.2006 |
| **யூன்** | .. | வெள்ளி | 02.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.05.2006 |
| | | வெள்ளி | 09.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.05.2006 |
| | | வெள்ளி | 16.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.06.2006 |
| | | வெள்ளி | 23.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.06.2006 |
| | | வெள்ளி | 30.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.06.2006 |
| **யூலை** | .. | வெள்ளி | 07.07.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.06.2006 |
| | | வெள்ளி | 14.07.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.06.2006 |
| | | வெள்ளி | 21.07.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.07.2006 |
| | | வெள்ளி | 28.07.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.07.2006 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006, சனவரி 01.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.